06.02.2024 OS.No. 155/2018

சாட்சி : PW.1 அமுதா

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி: (9 முதல் 12. 17 முதல் 19 பிரதிவாதிகள் வழக்கிறஞர்)**

என் தாத்தா மூக்கையா சேர்வைக்கு இலுப்பைக்குடியில் பல்வேறு சொத்துக்கள் உள்ளன. அந்த சொத்துக்களை 1982ம் ஆண்டு பாகப்பிரிவினை செய்துவிட்டார்கள். அந்த பாகப்பிரிவினை பதிவு செய்யப்படவில்லை. பாகப்பிரிவினை செய்து கொண்ட பிறகு அவரவர் பெயருக்கு பட்டா மாறிவிட்டது. மூக்கையா சேர்வைக்கு என் தகப்பனார் அழகு (எ) அழகப்பனும் ஒரு மகன். மேற்படி பாகப்பிரிவினையில் என் அப்பாவுக்கும் சொத்து கிடைத்துள்ளது. அந்த சொத்துக்களின் விபரங்கள் எனக்கு தெரியும். சர்வே எண் தெரியாது. மொத்தம் 1 ஏக்கர் நிலம் என் அப்பாவுக்கு பாகப்பிரிவினையில் கிடைத்தது. பட்டா நம்பர் ஞாபகம் இல்லை. என் அப்பாவிற்கு பாகப்பிரிவினையில் பங்கு கிடைத்தற்கான ஆவணம் எதையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. பூர்வீக சொத்து 1 ஏக்கர் 6 சென்ட் என் அப்பாவுக்கு கிடைத்தது. அந்த சொத்துக்குரிய செட்டில்மெண்ட் ஆவணத்தை பார்க்கவில்லை. எனக்கு எழுத படிக்க தெரியாது. என் பாட்டனார் மூக்கையா சேர்வைக்கு சுப்பையா, அழகு, சண்முகம், லெட்சுமி மற்றும் சேதுராமன் ஆகியோர் பிள்ளைகள். தாவா சொத்தை என் தகப்பனார் யாருக்கும் கிரையம் கொடுக்கவில்லை. அவ்வாறு என் தகப்பனார் 4ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்திருப்பதாக பிராதில் சொல்லவில்லை. என் தகப்பனார் 4ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்ததாக பதிவு செய்யப்பட்டுள்ள கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று C பரிகாரம் கேட்டுள்ளேன். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் காவல் நிலையத்தில் நானோ, என் சகோதரியோ புகார் எதுவும் கொடுக்கவில்லை. என் தாயார், சகோதரர்களை இவ்வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன். என் தாத்தா எழுதி கொடுத்த சொத்தை எனக்கு கொடுக்காமல் கால தாமதம் செய்து வந்ததால் அவர்களை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன். அவர்களிடம் பாகம் பிரித்து கொடுக்குமாறு கேட்டதற்கு ஆதாரம் இல்லை. தாவா சொத்து 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் பாத்தியம் என்பதால் அவர்களுக்கும் சேர்த்து விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேன். அவ்வாறு கேட்க சட்டம் இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. நானும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் கூட்டாக சேர்ந்துதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. மாவட்ட வருவாய் அலுவலகரிடம் 9 முதல் 13, 17, 18 பிரதிவாதிகள் பட்டா மாறுதல் கோரி மனு

தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தாக்கல் செய்தார்கள். அந்த மனு தாக்கல் செய்ததால் தான் நான் இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மூக்கையா சேர்வையின் 3வது மகள் லெட்சுமி என்பவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. அவ்வாறு சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடிக்கு உரியது என்று சொன்னால் சரியல்ல. 18, 19 பிரதிவாதிகளை இவ்வழக்கில் தரப்பினராக ஏன் சேர்த்துள்ளேன் என்றால் நான் அவர்களை சேர்க்கவிலலை. அவர்கள் என் சித்தப்பா 17ம் பிரதிவாதி சேதுராமனின் மக்கள் ஆவார்கள்.

என் தாத்தா எழுதி வைத்த உயிலை பார்த்துள்ளேன். அது பதிவு செய்யப்படவில்லை. அந்த உயிலில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சுந்தராஜன் என்பவரும், லெட்சுமணன் என்பவரும், காசி விஸ்வநாதன் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். இந்த பிரச்சினை உயிலை என் அம்மாவிடம் கேட்டு வாங்கினேன். இந்த வழக்கு போடுவதற்காக வாங்கினேன். இந்த உயிலை யார் எழுதினார் என்று எனக்கு தெரியாது. சாட்சி கையெழுத்து போட்டவர்கள் எந்த ஊர் என்று தெரியாது. அதில் காசி விஸ்வநாதன் என்பவரை நேமத்தான் பட்டிக்கு சென்று பார்த்தேன். காசி விஸ்வநாதன் உயிருடன் இருக்கிறார். மேற்படி உயிலை தட்டச்சு செய்தவர் யாரென்று தெரியாது. மேற்படி உயிலை நானும், என் அம்மாவும், என் சகோதரர்களும் கூட்டு சேர்ந்து மோசடியாக தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உயில் எழுதி 40 ஆண்டுகள் ஆகிவிட்டது. வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தின் தாள்கள் மிகவும் புதியதாக காணப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. உயிலில் கண்ட சொத்துக்களை என் பாட்டனார் 1955ல் கிரையம் வாங்கினார். வா.சா.ஆ.2 கிரையப் பத்திரம்தான் அது. தாவா சொத்துக்கு செட்டில் மென்ட் பட்டா என் பாட்டனார் மூக்கையா சேர்வை பெயரில் உள்ளது. அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. உயிலை என் தாயார் கொடுத்தார். பட்டாவை கொடுக்கவில்லை. தற்பொழுது நான் என் அம்மாவோடு பேசுவது இல்லை. வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தின் அசல் ஆவணம் என் அம்மா வசம் உள்ளது. மேற்படி கிரைய பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்கும், தாவா சொத்துக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் சொத்து விபரம் தெளிவாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. அசல் கிரைய ஆவணமும், செட்டில்மென்ட் பட்டாவும் என் அம்மாவிடம் தான் உள்ளது என்றும், அதை நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தாமல் சம்மந்தம் இல்லாத ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என் பாட்டனார் செய்து வைத்த பாகப்பிரிவினை பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை.

பூர்வீக சொத்துக்களை பொறுத்து உயில் எழுதி வைக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. பிராது பக்கம் 7ல் 9வது வரியில் வாதிகளும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் சர்வ சுதந்திர பாத்தியமாக பாக சொத்துக்களை மேற்படி சண்முகமும், சேதுராமனும் சமமாக அடைந்து கொள்ள வேண்டும் என்று அந்த உயிலில் எழுதி வைத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை 1/5 பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.மோசடியான ஆவணங்களை வைத்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இது நிலைநிருக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.